Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 12 ( 26 - 05 - 1991 ) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 97

## மருந்துப்பொருள்விலை மீள்பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் மருந்துப் பொருள்களின் நிர்ணய விலைகள் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளன. தனியார் மருந்தகங்களிலும் மருத்துவமனைகளிலும் தற்போது விற்பனையாகும் பல மருந்துப் பொருள்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இந்நிலைமையை நீக்குவதற்காகவே இந்த நடவடிக்கை ( 6 ஆம் பக்கம் பார்க்க)

### குறுகியமத நோக்குடையதென

# யுத்த நிறுத்தத்தை புலிகள் நிராகரிப்பு

பௌத்தர்களின் வெசாக் பண்டிகையை முன்னிட்டு மூன்று நாட்களுக்குப் போர்நிறுத்தம் செய்யப்போவதாக சிறிலங்கா அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ளது. இந்தத் திடீர் அறிவிப்பு சமாதானத்திற்கான ஒரு நல்லெண்ண சமிக்ஞை அல்ல. இது பௌத்த மகா சங்கத்தினரை திருப்திப்படுத்தவும், வெசாக் பண்டிகையின்போது இராணுவத்தினருக்கு ஓய்வு கொடுக்கவும் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக நடவடிக்கையாகும். சமாதான வழிமுறையைக் கேலிக் கூத்தாக்கும் இந்தப்போர் ஓய்வு அறிவிப்பைநாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திலிருந்து வெளியாகியுள்ள அதிகார பூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுக்கும் வகையில் காலவரையறையற்ற போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க நாம் என்றும் தயாராக இருக்கின்றோம். இந்த நல்லெண்ண நோக்குடனேயே நாம் இப்புத்தாண்டில் ஒருதலைப்பட்சமாக காலவரையறையற்ற போர்நிறுத்தத்தை அறிவித்தோம். ஆனால் சிறிலங்கா அரசு எமது போர் நிறுத்த அறிவித்தலை நிராகரித்தது. சித்திரைப் புத்தாண்டில் இன நல்லெண்ணத்திற்கான சமாதான சமிக்ஞையாக போர்நிறுத்தம் செய்யப்படவேண்டுமென பல்வேறு வட்டாரங்களிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் சிங்கள அரசு அவற்றிற்குசெவிசாய்க்கவில்லை இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கும் போர் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழ் மக்கள் இராணுவத்தால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் மூன்று தமிழ் பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறுமணியளவில் மட்டக்களப்பிலுள்ள கதிரவெளியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கதிரவெளி தோணி போட்டமடு என்னுமிடத்தில்வைத்து கதிரவெளியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஜீவநாயகம்(வயது (6ஆம் பக்கம் பார்க்க)

## உணவு முத்திரைகளை நிறுத்த உத்தரவு

(கொழும்பு)

உணவு முத்திரை நிறுத்தப்படவுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் மானிய உதவிகளையும், உணவு முத்திரையையும் நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

## பஸ் - பவ்லோ மோதல்; இருவர் காயம்

(வவுனியா)

பயணிகள் பஸ்ஸுடன் சிறிலங்கா இராணுவ பவ்லோ ஆமட்கார் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச்சென்றபஸ் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வவுனியாவில் இராணுவத்தின் தடைமுகாமில்சோதனை முடிந்து ரயில் நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது எதிரிலிருந்து வேகமாக வந்த இராணுவ வாகனம் இதனுடன் மோதி (6ஆம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறை

## இறங்குதுறை புனரமைப்பு ஸ்தம்பித நிலையில்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தின் இறங்குதுறை புனரமைப்பு வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இந்த இறங்குதுறையின் ஒரு பகுதி மட்டுமே திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மிகுதிப் பகுதியை திருத்தி அமைப்பதற்கு தேவையான நிதி செயலக புனர்வாழ்வுப் பிரிவினரிடம் இல்லை இதனால் திருத்த வேலைகளைத் தொடர முடியாத நிலைமை தோன்றியுள்ளது. இந்த நிலை தொடர்ந்தும் இருந்தால் உணவுப் பொருள்களுடன்வரும் ஒரு கப்பல் மட்டுமே இந்த இறங்குதுறையைக் கையாள முடியும் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை மக்கள் குடியிருப்புகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஒருவர் படுகாயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

### நிர்வாகசேவை ஆள் சேர்ப்பில்

## இன விகிதாசாரம் பேணப்படவில்லை

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான நிர்வாக சேவைக்கு ஆள் சேர்க்கும் பரீட்சையில் திருப்திகரமான நடைமுறை பின்பற்றப்படவில்லை கடந்த வருடம் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக பரீட்சார்த்திகளினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த மகஜரில், மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் இருந்து 25 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 12 பேர் என்றும் தெரியவருகிறது இதன்படி மாகாண அடிப்படையில இன விகிதாசாரம் (6 ஆம் பக்கம் பார்க்க)

### மத்திய புலனாய்வுக் கழகத்திடம்

## ராஜீவ் கொலை வழக்கு ஒப்படைக்கப்பட்டது

(சென்னை)

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கை மத்திய புலனாய்வுக் கழகத்திடம் தமிழ் நாடு அரசு ஒப்படைத்துவிட்டது.

நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம்பேசிய தமிழ் நாடு தலைமைச் செயலாளர், வி. அந்ரனி இந்த வழக்கின் விசாரணைகளும், நீதிமன்றப் பணியும் முற்றுப் பெறும்வரை மாநில அரசின் அதிகாரிகள் எவரும் பத்திரிகையாளர்களிடம் இதுபற்றிப் பேசமாட்டார்கள் என்று கூறினார்.

## இலங்கை தமிழ் அகதிகளின் 12 குடிசைகள் தீக்கிரை

(சென்னை)

தமிழ்நாட்டில் உள்ள பன்னிரெண்டு இலங்கைத் தமிழ் அகதிகள் குடிசைகள் தீயிடப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்தோடு இலங்கைத் தமிழர் மீதான நெருக்கடிகளும் அதிகரித்துவருவதாகவும் தெரியவருகின்றது

ராஜீவின் கொலையைத் தொடர்ந்து விமான நிலையத்திலிருந்து வெளியேறும் தமிழர் மீது கடும் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் தலைவர் தெரிவு; குழப்பம் நீடிப்பு

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பதவிக்கு யாரைத்தெரிவு செய்வது என்பதில் தொடர்ந்து குழப்ப நிலை நீடிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன திருமதி சோனியா காந்தியின் பெயர் முன்மொழியப்பட்ட போதிலும் அவர் அப் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டதை தெரிந்தபோதும் அதுபற்றி மீள்பரிசீலனை செய்ய கட்சியின் ஒரு சாரார் வற்புறுத்தும் அதேவேளையில் உத்தரப்பிரதேச முன்னாள் முதல் (6 ஆம் பக்கம் பார்க்க)

### கல்வி புனரமைப்பிற்கு

## ஆசிய அபிவிருத்தி வங்கி 60 கோடி ரூபா உதவி

(கொழும்பு)

இலங்கையின் அவசர கல்வி புனரமைப்புத் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ரூபா 60 கோடியைக் கடனாகவழங்கியுள்ளது வன்செயல்களால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கட்டடங்களைத் திருத்துதல்மீளஅமைத்தல், பாடசாலை உபகரணங்களை வழங்குதல் ஆகிய பணிகள் பிராந்தியக் கல்விப்பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

கல்வி அமைச்சிலுள்ள திட்ட முகாமைத்துவ அலுவலகத் (6ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரண விநியோகத்திற்கு

## அரசாங்கம் வழங்கும் டீசல் போதுமானதாக இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த மற்றும் தொழில் இழந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ளுவதற்கு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் வழங்கும் எரிபொருள் (டீசல்) போதுமானதாக இல்லை என்று யாழ். செயலக உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறையில் இருந்து பத்து மெற்றிக் தொன் உணவு பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதற்கு 33 லீற்றர் எரிபொருள் தேவை. ஆனால் (6ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியில் கடும் ஷெல் வீச்சு

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முழுநாளும் தொடர்ச்சியான அகோர ஷெல் தாக்குதலை நடாத்தினர். புளியங்கூடல், வேலணை, சுருவில், நாரந்தனை, சரம்பொன் ஆகிய பகுதிகளை நோக்கி காலை (6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வகுப்புக்கள்

Cake Icing Sugar Craft General Cookery, Hair Dressing புதிய பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளன உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Acadamy.

71 B, Nayanmar Road
Off Kachcheri Nallur Road
Nallur Jaffna.
(R/1409)

### தவறிவிட்டது

திருநாவுக்கரசு மோகனதாஸ் என்பவருடைய அடையாள அட்டை 683470368 V சாவகச்சேரி தபால் நிலையத்துக்கு முன்னால் தவறிவிட்டது எடுத்தவர்கள் தயவு செய்து விக்கினேஸ்வரன் ஜூவலர்ஸ் கண்டி வீதி, சாவகச்சேரி, அல்லது விமலாஸ், நவீன சந்தை கண்டி வீதி, சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். 1000/ ரூபாவுக்கு மேல் சன்மானம் வழங்கப்படும் (R/1411

### தவறிவிட்டது,

638621193 V இலக்கமுடைய அடையாள அட்டை 22-04-1991 இல் பாரத் ஸ்ருடியோ படப்பிடிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. தவறுதலாக எடுத்தவர்கள் தயவு செய்து உடனடியாக பாரத் ஸ்ருடியோ, 82/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். (R / 1410)

### ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடி றோட்டில் மணிபேர்ஸ் ஒன்று கே. பாலச்சந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


## நினைவஞ்சலி

4ஆம் ஆண்டு 45ஆம் நாள்



| 2ஆம் லெப். ரம்போசிவா | 2ஆம் லெப். உத்தவா |
|---|---|
| தங்கவடிவேல் சிவகுமாரன் | தங்கவடிவேல் சந்திரகுமார் |
| வீரஜனனம்: 25-11-1968 | 22-01-1974 |
| வீரமரணம்: 26-05-1987 | 12-04-1991 |

மண் மீதில் நீங்கள் மறைந்து போனாலும்
எண்ணமதில் என்றும் வாழ்கிறீர் - மீண்டும்
பிறந்திடல் வேண்டும் பூவுலகில் வென்று
சிறந்திடும் தாயகத்தை காண.

குடும்பத்தினர், நண்பர்கள்.

வல்வெட்டித்துறை. (B/2571)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை கப்டன் அலன்

| தாய் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 06 - 05 - 1962 | 26 - 05 - 1987 |

"இந்த மண் எங்களின் சொந்த மண்
இந்த மண் மீட்புக்கு நாம் அனைவரும் தயார்"

உன் அன்பர்கள்
வ. இ. நடனசிகாமணி, இரத்தினேஸ்வரி
குடும்பத்தினர், சகோதரர்கள்,
நண்பர்கள்.

பாக்கியலிங்கம் வீதி,
வல்வெட்டித்துறை. (R/ 1408)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 26



**கப்டன் அலன்**
(நடனசிகாமணி பாக்கியலிங்கம்-வல்வெட்டித்துறை)



**நிசாந்தன்/குடல்**
(வில்வரட்ணம் ஜெயரட்ணம் - கதிரிப்பாய்)

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா வைரவப் புளியங்குளப்பகுதியில் சிறிலங்காப் படையினரின் திடீர் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**ரகுமான்** (அருளம்பலம் இரகுபதி - இரணை இலுப்பைக்குளம்)

இதே ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமகன்

1987ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**2ஆம்லெப்.ரமேஸ்** (சி. லோகநாதன் - அக்கரைப்பற்று)

இதே ஆண்டு யாழ். கொட்டடிப் பகுதியில் சிறிலங்கா படைகளுக்கெதிரான நடவடிக்கைகளின் போது எமைப்பிரிந்த

**2ஆம்லெப்.சேது** (சிவசேது - கொட்டடி, யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**செட்டி** (கணபதிப்பிள்ளை நந்தகுமார் - மாசியப்பிட்டி)

இதே ஆண்டு வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது உடுப்பிட்டியில் விமானக்குண்டு வீச்சினால் வீரமரணமடைந்த

**கப்டன் வீமன்** (ந. நாகராசா - நாகர்கோவில்)

**2ஆம்லெப்.ரம்போசிவா** (தங்கவடிவேல் சிவகுமாரன் - வல்வெட்டித்துறை)

**செட்டி** (சுந்தரம் செல்வராசா - நாவலடி, உடுப்பிட்டி)

**ராஜன்** (சாவகச்சேரி)

தொண்டமனாற்றில் நடைபெற்ற நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த

**கப்டன் அலன்** (நடனசிகாமணி பாக்கியலிங்கம் - வல்வெட்டித்துறை)

வரணிப்பகுதியில் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த

**2ஆம்லெப்.நாகேந்திரன்** (மகேந்திரன் - மடுக்கோயில்)

நெடியகாட்டுப் பிள்ளையார் கோயில் மீது நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சின் போது படுகொலை செய்யப்பட்ட 15 பொதுமக்கள்

கெருடாவிலில் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டு வீச்சின் போது படுகொலை செய்யப்பட்ட 13 பொதுமக்கள்

இதே ஆண்டு மானிப்பாயில் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டு வீச்சின் போது படுகொலை செய்யப்பட்ட 9 பொது மக்கள்

இதே ஆண்டு வீரமரணமடைந்த

★ **கண்ணன்** (பாலசிங்கம் - தம்பலகாமம்)

1990ஆம் ஆண்டு மூளைக்காய்ச்சல் நோயினால் எமைப்பிரிந்த

**நிசாந்தன்/குடல்** (வில்வரட்ணம் ஜெயரட்ணம் - கதிரிப்பாய்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

\- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2562)

முல்லைத்தீவில் நிவாரணம்

## அ.அதிபர்-மக். பிரதிநிதிகள் மத்தியில் உடன்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் வழங்குவது குறித்த அரச அதிபருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமுகமான முடிவெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவில் கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண நடவடிக்கை எதுவும் கடந்த 10 மாதகாலமாக கிடைக்கவில்லை என்பது யாவரும் அறிந்ததே.

இந்நிலையில் 16 ஆம் திகதியில் இருந்து ஒரு வார காலமாக மறியல் போராட்டம் நடத்த மக்கள் முன்னறிவித்தல் விடுத்திருந்தனர்.

இத்தருணத்தில் அரச அதிபருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வாராந்த நிவாரணம் பெறத்தகுதியுடையவர்கள் என்றும் திங்கட்கிழமையில் இருந்து நிவாரணம் வழங்குவதுடன் உள்ளூர் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து ப.நோ.கூ. வழங்கி அவை வாராந்த நிவாரணமாக வழங்குதல், நான்காவது வாரத்தில் இருந்து கொழும்பில் இருந்து கப்பல் மூலம் பொருள் தருவித்துக் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்குதல் எனும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

எனினும் கப்பல் வரவில்லை ஊரடங்குச்சட்டம் எனும் ஏதாவது காரணங்களை வைத்து மீண்டும் உணவு விநியோகம் தடைப்பட்டால் முன்னறிவித்தல் இன்றியே நேரடிப்போராட்டத்தில் ஈடுபட வேண்டிநேரிடும் எனவும் மக்கள் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

## நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டுநிறைவு விழாவும் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் நாளை 27 ஆம் திகதியும், நாளை மறுதினம் 28 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் காலை மாவீரர் நினைவாக வடமாகாண ரீதியிலான ஐந்து மைல் மரதன் ஓட்டப்போட்டியும் பிற்பகல் விளையாட்டுப் போட்டியும் இடம் பெறும். இரவு 8.00 மணியளவில் "இந்த மண் எங்களின் சொந்த மண்" புகழ் சாந்தன் குழுவின் புரட்சிக் கானங்கள் இசை நிகழ்ச்சி இடம் பெறும்.

## வேலணை ஆஸ்பத்திரியை ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணை அரசினர் வைத்தியசாலையை மீண்டும் ஆரம்பித்து வைப்பதற்கான முதற்கட்ட வேலைகள் நடைபெற்று வருவதாக பிராந்திய சுகாதார நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வேலணை வைத்தியசாலை வைத்தியர்கள் தற்காலிகமாக குருநகர் வைத்தியசாலையில் தங்கியிருந்து அகதிகளுக்கான மருத்துவ கடமையை ஆற்றி வருகின்றனர். இதேவேளை வேலணைப் பகுதிக்கு சென்று வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான சாதக நிலைமையையும் பரிசோதித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வேலணை வைத்தியசாலை தீவுப்பகுதி மீதான சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கையினால் காலி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

சோவியத் படைகள்

## மொங்கோலியாவிலிருந்து 1992 இல் முற்றாக விலகும்

(மொஸ்கோ)

மொங்கோலியாவில் இருந்து மூன்றாவது கட்டமாக 8000 சோவியத் துருப்புகள் தாயகம் திரும்பும் என சோவியத் இராணுவ ஜெனரல் தெரிவித்தார்.

1992 ஆம் ஆண்டு இறுதிக்குள் சோவியத் துருப்புகள் முழுவதும் மொங்கோலியாவில் இருந்து வெளியேறி விடும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான படையினர் கனரக இராணுவ உபகரணங்கள் சகிதம் மொங்கோலியாவில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் இப்படையினரின் பயிற்சி ஒத்திகையின்போது ஏற்பட்ட சேதங்களையும் சோவியத் படைகளே சீரமைத்து வருகின்றன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## தேர்தல் திகதிகளில் மாற்றம் எதுவுமில்லை

### டி. என். சேஷன்

(புதுடில்லி)

முன்னர் அறிவிக்கப்பட்ட தேர்தல் திகதிகளில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது என தலைமைத் தேர்தல் கமிஷனர் டி. என். சேஷன் அறிவித்துள்ளார். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்ட வாக்குப் பதிவு திகதிகளுக்கு முன்னராக வாக்குப் பதிவை நடத்துவதை காங்கிரஸ் தவிர இதர கட்சிகள் எதிர்ப்பதாக தேர்தல் கமிஷனர் கூறியுள்ளார்.

ஈராக்-குவைத்

## எல்லை நிர்ணயிக்க நிபுணர்கள் குழு நியமனம்

(நியூயோர்க்)

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 687 தீர்மானத்தின்படி ஈராக்கிய குவைத்திய எல்லைப் பகுதியை வரையறுப்பதற்காக சுயேச்சையான மூன்று நிபுணர்களை ஐ.நா. ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக ஐ.நா. தலைமைச் செயலாளர் பெரஸ் டி குய்யார் தெரிவு செய்துள்ளார்.

இந்தோனேசியா, சுவீடிஷ், நியூஸிலாந்து பிரதிநிதிகளே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

## மூன்றிலிரண்டு ஆசியருக்கே சுகாதார வசதியுண்டு

(நியூயோர்க்)

ஆசியாவில் மும்மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டுபங்கினருக்கு மட்டுமே சுகாதார பராமரிப்பு, வசதியும், சுத்தமான குடிநீரும் கிடைக்கின்றது என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டப் பிரிவின் மனித அபிவிருத்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் ஆசியாவில் குறைந்த அளவு மனித அபிவிருத்தி காணப்படுவதாகவும், தெற்காசியா விசேடமாக படிப்பறிவு விகிதம் மிகவும் குறைந்தளவில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இங்கு எழுபது கோடி மக்கள் வறுமை நிலையில் உள்ளனர் என்றும், இவர்களில் பெரும்பாலானோர் இந்தியா பங்களாதேஷில் வாழ்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## அரசிற்கெதிரான செய்தி வெளியிட்ட பல பத்திரிகையாளர் மாலைதீவில் கைது

(ஜெனிவா)

மாலைதீவு அரசாங்கத்தையும் அரசாங்கத்தின் பதவி வகிப்போரையும் விமர்சித்து செய்தி வெளியிட்டமையால் அந்நாட்டு செய்தியாளர்கள் பலரை மாலைதீவு அரசாங்கம் கைது செய்து சிறையில் வைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

[illegible] அறிக்கையில் மாலைதீவின் [illegible] இதழான "சங்"கையும் மேலும் இரு வெளியீடுகளையும் மாலைதீவு ஜனாதிபதி மூடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுருக்கெழுத்து பயிற்சி நெறி

(புலோலி)

வடமராட்சி சுருக்கெழுத்தாளர் சங்கம் நடாத்தும் தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி நெறி ஆலடி சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நாளை திங்கட்கிழமை (27.5.91) முற்பகல் 9.30மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும். இந் நிகழ்ச்சியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் வ.சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார்

## போலந்து இஸ்ரேல் உறவில் நெருக்கம்

வர்த்தகம், கலாசாரம் உட்பட ஐந்து ஒப்பந்தங்கள் போலந்துக்கும், இஸ்ரேலுக்கும் இடையே கைச்சாத்தாகியுள்ளது. இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவில் போலந்து ஜனாதிபதி லேக் வலேசாவும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவியும் கைச்சாத்திட்டனர். இஸ்ரேல் ஜனாதிபதி மற்றும் பிரதமர் போலந்துக்கு விஜயம் மேற்கொள்ளும்படி வலேசா அழைப்பு விடுத்துள்ளார்.

போலந்திலுள்ள பாலஸ்தீன தூதரகத்தை போலந்து மூட வேண்டுமென இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ஷாமீர் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தேசம் அதற்கு பாரமாகிறார்

பட்டாம் பூச்சியாய் பிறந்த பிஞ்சுகள்
பாசறை சேர்ந்து பயிலும் நெஞ்சுகள்
கொஞ்சம்கூட சஞ்சலம் இன்றி
கொள்கைப் பிடிப்புடன் உலாவரும் வேளை
இம்மண்ணினை மறந்த எங்கள் பெரிசுகள்
ஈழத்தெருவெலாம் உலா வருகிறார்
செய்வது தெரிந்தே செய்யும் இவர்கள்
தேசம் அதற்கு பாரம் ஆனவர்
பெண்கள் புலியாய் புறப்பட்ட போதும்
போராட துணிவு அற்ற வீரர்கள்
தங்கைகள் பின்னே வம்பு பேசுறார்
தமிழ் சந்ததி அதற்கே சேவலம் சேர்க்கிறார்

— வி

## மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்விப்பொதுத்தராதர(உயர்தர) பரீட்சை காரணமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பண்டிதர், பாலபண்டிதர் வகுப்புகள் மீண்டும் ஜூன் முதலாந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது. இவ் வகுப்புகள் நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

## மிருக உணவாக மிருக எச்சங்கள்

மிருகங்களுக்கான உணவைப் பெற்றுக் கொள்வது தற்போதைய சூழ்நிலையில் சிரமமானதாகும். விலை அதிகரிப்பும், பற்றாக்குறையும் நாளாந்தம் காணக்கூடியதாக உள்ளது இதை ஓரளவேனும் குறைக்க மிருக எச்சங்களையே மிருகங்களுக்கு உணவாக அளிக்கலாம்.

பன்றியின் மலத்தில் 20 வீதம் புரதம் உண்டு காய வைத்த பன்றியின் மலத்தை கோழியின் உணவுடன் சேர்க்கலாம் கொழுக்க வைக்கும் பன்றிக்கு இதை 20 - 30 வீதம் சேர்க்கலாம்

கோழியின் எச்சத்தில் 20 வீதம் புரதமும், "பி 12" உயிர்ச்சத்தும் காணப்படுகின்றது. இதை 70 - 90 செல்சியஸ் டிகிரியில் உலர்த்தி பன்றியின் உணவில் 30 - 40 வீதம் வரை அளிக்கலாம். நல்ல முறையில் சேகரித்த கூளம் சேர்ந்த கோழி எருவைக் கூட பன்றி உணவாகவும் கால்நடை உணவாகவும் பயன்படுத்தலாம்.

காயவைத்து உலர்த்திய புதிய சாணத்தை கோழிக்கு 10 வீதம் வரை உணவுடன் கலந்து வழங்கலாம். இதனால் சில அத்தியாவசியமான அமினோ அமிலங்களும் "பி" குடும்ப உயிர்ச்சத்துக்களும் 14 வீதம் வரை புரதமும் கிடைக்கின்றது.

இயற்கையில் கோழி-சாணத்தையும், பன்றி-மலத்தையும் உண்டு வாழ்வது கண்ணால் காணக்கூடியதாய் உள்ளது. இவற்றையும் நாம் எமக்கு கிடைக்கக் கூடிய அளவு உபயோகித்து சிரமங்களை குறைத்து மிருக அழிவில் இருந்து பாதுகாக்க முயலுவோம்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

## சிரியா லெபனான் உடன்பாடு எகிப்து வரவேற்பு

(கெய்ரோ)

சிரியாவுக்கும், லெபனானுக்கும் இடையே கைச்சாத்தாகியுள்ள உடன்படிக்கையை எகிப்து வரவேற்றுள்ளது சிரியாவும் லெபனானும் தமக்கு இடையிலான பரஸ்பர நல்லுறவை வளர்க்கும் இவ் உடன்பாட்டை எகிப்திய உதவிப்பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான புருத்ரோஸ் காலீ கெய்ரோவில் வெளியிட்ட அறிக்கையொன்றில் வரவேற்றுள்ளார். இவ் அறிக்கையில் தெற்கு லெபனான் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வாபஸ் பெறப்படவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

## ராஜீவ் மறைவுக்கு ஐ.நா.அனுதாபம்

(ஜெனிவா)

ராஜீவ் காந்தியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஐ.நா. பாதுகாப்புச்சபை நேற்று முன்தினம் கூடியுள்ளது.

உலக சமுதாயம் ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் கொண்டிருப்பதாக பாதுகாப்புச் சபையின் தலைவரான சீனவைச் சேர்ந்த லீயாவோ குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தலைவர் என்ற வகையில் ஐ.நா. விற்காக ராஜீவ் ஆற்றிய பணிகள் பற்றி இக் கூட்டத்தில் புகழப்பட்டது.

## பாகிஸ்தான் பிரதமரும் பா. ஜனதா தலைவர்களும் சந்திப்பு

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவரும், இந்தியாவின் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தியின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வந்திருந்த பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து பேசியுள்ளார். பாரதீய ஜனதாவின் தலைவர்களான எல். கே. அத்வானி, ஏ. பி. வாஜ்பாய் ஆகியோரை சந்தித்து அரைமணிநேரம் உரையாடினார். நவாப்ஷெரீப் இச்சந்திப்பின் போது இந்திய பாகிஸ்தான் உறவுகள் சம்பந்தமான பிரச்சினைகள் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

# இந்தியத் தேர்தலில் இளிச்சவாயர்கள் கட்சி

இந்தியாவில் நடைபெற விருந்து பிற்போடப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில் இம்முறை இளிச்சவாயர்கள் என்ற ஓர்புதியகட்சி போட்டியிடுகிறது.

இதில் போட்டியிடும் எம். சுந்தி, இராமர், லெட்சுமணன் ஆகிய மூவரும் தமது பெயருக்கு உரிய முறையில் வேவுமிட்டுத் காந்தி சிலையை வணங்கித்தமது பிரசாரத்தை ஆரம்பித்தனர்.

இந்தியாவில் எத்தனை இளிச்சவாயர்கள் இருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதே இவர்களின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.


## படமாடம்

உங்களுக்குத்தேவையான

- படவகைகளை பெற்றுக்கொள்ளவும்
- படங்களுக்கு சட்டமிடவும்
- கண்ணாடிவகைகளை

விரும்பிய அளவுகளில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கும்

நீங்கள் நாடவேண்டிய முன்னணி ஸ்தாபனம்

**படமாடம்**

ஸ்ரானலி வீதி, யாழ்ப்பாணம்.

(B/2581)



இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்

## தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

1. 1990 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 1990 டிசம்பர் 31 ஆம் திகதி வரையினான காலப்பகுதியில் வெளிவந்த கீழ்க்கண்ட துறைசார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

   1. நாவல் 2. சிறுகதை 3 நாடகம்
   4. கவிதை 5. இலக்கியத்திறனாய்வு
   6. சிறுவர் இலக்கியம்
   7 சமூகவியலும் மனிதப்பண்பியலும்
   8. அறிவியல் 9. ஏனையவை.

2. நூல் எழுதியவர் இலங்கையராயிருப்பதோடு நூலும் இலங்கையில் அச்சிடப்பட்டதாக விருத்தல் வேண்டும்.

3. இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும், எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கப்படும். செயலாளரின் முடிவே இறுதியும் முடிவானதுமாகும்.

4. மேற்குறித்த காலத்தில் இலங்கையில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ நேரடியாகவோ 15-08-91 க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

   பணிப்பாளர்,
   இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
   "றக்ஷண மந்திரய" (9ஆவது மாடி),
   21, வொக்ஷோல் வீதி,
   கொழும்பு - 02.

5. நூல்களை அனுப்பும் உறையில் இடதுபுற மூலையில் "தமிழ் நூற் பரிசுத் தேர்வு" என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. 1992 ஆம் வருடம் நடாத்தப்படவுள்ள தமிழ் இலக்கிய விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

க. சண்முகலிங்கம்,
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கொழும்பு-2,
13-05-1991.

(B/ 2579)


## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இந்த மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் ஸ்கந்த வரோதய மைதானத்தில் நடைபெறவுள்ளது என வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டி பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் நடைபெறும் என்பதை விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் அறியத் தருகின்றார்.

## பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த இரண்டு வருடங்களாக நடைபெறாத பரீட்சைகள் விசேட பரீட்சைகளாக நடைபெற இருப்பதால் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கல்லூரியின் அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1989 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய மாணவர்கள் ஏற்கனவே விண்ணப்பித்து விட்டதால் 90 ஆம் ஆண்டுக்கான விசேட பரீட்சைகள் எடுக்க வேண்டிய மாணவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஜூன் மூன்றில் ராஜ்யசபாக் கூட்டம்

(புதுடில்லி)

அரியானாவில் ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பதற்கு வசதி செய்யும் முகமாக எதிர்வரும் மூன்றாம் திகதி ராஜ்யசபை கூட்டப்படுகிறது. இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி வெங்கட்ராமன் விடுத்துள்ளார். இரண்டு நாட்களுக்கு ராஜ்யசபைக் கூட்டம் நடைபெறும்.

## தம்பலகாமத்தில் பனிக்கட்டி மழை

(தம்பலகாமம்)

அண்மையில் தம்பலகாமப் பகுதியில் பனிக்கட்டி மழை பெய்தது. பனிக்கட்டிகள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ திராட்சைப் பழங்கள் அளவுள்ளனவாக இருந்தனவாம்.

மேலும் இந்தப் பனிக்கட்டிகள் வீழ்ந்தபோது வீசிய புயல் காற்றினால் மரங்கள் பல முறிந்து வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 01.06.1991 காலை 10.00 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறும். சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்கு பற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.
24.05.1991

கௌரவ செயலாளர்

(B/2578)



மாதாந்த பயிற்சிப் பரீட்சை

## இலவச கருத்தரங்கு

GET SET TEST – II

நேர அட்டவணை

### ஆண்டு-5 (புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை)

பரீட்சை 27 - 05 - 1991

| பரீட்சை | கருத்தரங்கு |
|---|---|
| 1-00 - தமிழ் | 4-00 - தமிழ் |
| 2-15 - கணிதம் | 5-00 - கணிதம் |

### O/L Dec. 90 பரீட்சை 27-05 - 1991

| முற்பகல் பரீட்சை | | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|---|
| 7-00 - வர்த்தகம் - | I | 1-45 - விஞ்ஞானம் |
| 8-00 - கணிதம் - | I | 2-30 - கணிதம் |
| 9-00 - விஞ்ஞானம் - | I | 3-15 - தமிழ் |
| 10-00 - தமிழ் - | I | 4-00 - சமூகக்கல்வி |
| 11-00 - சமூகக்கல்வி - | I | 4-45 - ஆங்கிலம் |
| 12-00 - ஆங்கிலம் - | I | 5-30 - வர்த்தகம் |

### O/L Dec. 91 பரீட்சை 27-05 - 1991

| முற்பகல் பரீட்சை | | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|---|
| 7-00-வர்த்தகம் - | I | 1-45 - தமிழ் |
| 8-00 - கணிதம் - | I | 2-30 - சமூகக்கல்வி |
| 9-00- விஞ்ஞானம்- | I | 3-15 - கணிதம் |
| 10-00 -தமிழ் - | I | 4-00 - விஞ்ஞானம் |
| 11-00-சமூகக்கல்வி | I | 4-45 - வர்த்தகம் |
| 12-00- ஆங்கிலம் - | I | 5-30 - ஆங்கிலம் |

★ ஆசனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன் கூட்டியே பதிவு செய்து சுட்டெண்களைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு,

பரீட்சைப் பகுதி

**BOND** கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

B 2580



அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி
உங்களுக்குத் தேவையான

- கடவுச்சீட்டு (பாஸபோட்) படங்கள்
- அடையாள அட்டைப்படங்கள்
- கலர்ப்படங்கள்

என்பனவற்றை குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும்

- அடையாள அட்டை கவரிடுதல்
- போட்டோஸ்டற் பிரதி செய்துகொள்ளல்

(உங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் பிரதி செய்யலாம்)
(மற்றும் அல்பம், புகைப்படச்சுருள் போன்ற இதர தேவைகளையும், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**இளந்தென்றல்**

14, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(B/ 2582)

### ※ சிந்தனைக்கு ※

உண்மை தனக்குத் தெரிந்தபோது, அதை உரக்கக் கூவாதவன், பொய்யர்கள், போலிகளை உற்பத்தி செய்யும் மோசடிக்காரர்கள் ஆகியோருக்கு உடந்தையாகி விடுகிறான்.

— சார்லிஸ் பெகை


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 26.05.1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த.பெ.எண் 05


## ராஜீவ் ஜனநாயகவாதியா?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக பெரியளவிலதான தடயங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை ஒரு பெண் குண்டு வெடிப்பிற்கு காரணமாக இருந்தார் என்று மட்டுமே அனுமானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ராஜீவின் கொலைக்கு இதுவரை எவரும் உரிமை கோரவுமில்லை.

இந்நிலையில், ராஜீவ் காந்தியை யார் கொன்றார்கள், ஏன் கொன்றார்கள், கொன்றது சரியா? பிழையா? கொலைக்கான காரணம், நோக்கம் என்ன? என்ற வாத பிரதிவாதங்கள் ஒருபுறம் இருக்கட்டும் கொலைப் பட்டது யார். இவரது கொலை ஒரு ஜனநாயகவாதியின் கொலை எனக் கொள்ளலாமா என்பதை நோக்குதல் அவசியமானதாகும்.

ஏனெனில் ராஜீவின் கொலையைக் கேள்விப்பட்டவுடன் உலகத் தலைவர்கள் யாவரும் தமது அரசியல் உறவிற்கு ஏற்ப கண்டனங்களையும், கவலைகளையும் வெளியிட்டனர். சிலர் சிறந்த நண்பரை இழந்துவிட்டோம் என்றனர். சிலர் தம் நாட்டு மக்கள் துயரில் மூழ்கியுள்ளனர் என்றனர். பலர் கோழைத்தனமானது கொடூரமானது என்பதோடு ஒரு ஜனநாயகவாதி கொல்லப்பட்டு விட்டார் எனக் கண்டித்துள்ளனர்.

ஆனால். இவ்வாறான கவலையையும் கண்டனங் களையும் தெரிவித்தவர்கள் ஒரு சாதாரண இந்தியப் பிரஜைக்கோ அன்றி சோனியா காந்தியின் கணவரும், ராகுல் காந்தி, பிரியங்கா ஆகியோரின் தந்தையுமான ராஜீவ் காந்தியின் மரணத்திற்காகவோ இவ்வாறு தெரிவித்தார்கள் அல்ல. இந்தியாவின் முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் கட்சியின் தலைவரும், இந்தியாவின் எதிர்கால பிரதமர் என எதிர்பார்க்கப்பட்ட ராஜீவ் காந்தியின் மரணத்திற்கே இவ்வாறான கவலையும் கண்டனங்களும் எழுந்தன. அதாவது ஒரு அதிகாரத்தின் சின்னத்தின் வீழ்ச்சிக்கே அதிகார வர்க்கத்திடம் இருந்து கவலையும் கண்டனங்களும் எழுந்துள்ளன. இதனை ராஜீவ் காந்தி மரணமடைய காரணமாகவிருந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஏனைய பதினேழு பேர் தொடர்பாக உலகத் தலைவர்கள் எவரும் கவலை கொள்ளாததில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

ஆகையினால், ராஜீவ் காந்தி அதிகாரத்தில் இருந்த போதும், மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்காகவும் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின்னணியிலேயே ராஜீவ் காந்தியின் கொலைக்கு காரணம் தேடுதல் பொருத்தப்பாடு உடையதாகும்.

ராஜீவ் பிரதமராக இருந்தபோது பல இலட்சக் கணக்கான இந்திய ஆயுதப்படையின் உதவியுடனும், பல கோடிக்கணக்கான இந்தியாவின் செல்வத்துடனும் தனது அதிகாரத்தை மக்கள் மீதும், குறிப்பாக சிறுபான்மை இனங்கள் மீதும் திணித்தார். இந்தியாவினுள் பஞ்சாப்பினுள்ளும், காஷ்மீரிலும், இந்தியாவிற்கு வெளியில் இலங்கையிலும் அவரின் தீர்மானங்களின் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டார்கள். பலர் நிரந்தரமாக ஊனமடைந்தனர். பலர் சிறைகளில் வாடினர். பல கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இவ்வாறான நிகழ்விற்குக் காரணம் இங்குள்ள மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைக் கோரியமையும், அவற்றிற்காகப் போராட முற்பட்டமையுமாகும். தமது ஜனநாயக உரிமையைக் கோரிய மக்கள் மீது அரச பயங்கர வாதத்தினைக் கட்டவிழ்த்துவிட்டார் ராஜீவ் காந்தி. அதாவது தேசிய சிறுபான்மை இனங்களை அரசபயங்கர வாதத்தின் மூலம் அடக்கிவிடலாம் என ராஜீவ் செயற்பட்டார்.

ராஜீவ் காந்தி தனது ஆட்சிக் காலத்தில் எப்போதும் ஒரு ஜனநாயக வாதியாக செயற்பட்டதற்கான தடயங்கள் இருப்பதாக இல்லை. அவர் தலைமை தாங்கிய இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் மட்டுமல்ல, இந்தியாவிற்குள்ளும், அதற்கு வெளியிலும் அவரது நடவடிக்கைகள் ஜனநாயக ரீதியானதாகவோ, ஜனநாயக செயற்பாடுகளை மதிப்பதாகவோ இருக்கவில்லை இந்நிலையில் ராஜீவ்காந்தியின் மரணத்தை ஒரு ஜனநாயகவாதியின் படுகொலை எனக் கொள்ளுதல் தவறாகும். அதாவது ''ஜனநாயக நாடுகளின்'' தலைவர்கள் எல்லாம் ஜனநாயக வாதிகள் எனக் கொள்ளுதல் பொருத்தப்பாடு அற்றதாகும்.

## ரஞ்சனின் கொலை — ஒரு கண்ணோட்டம்

> தமிழினம் ( Tamil Nation ) என்ற ஆங்கில ஏட்டில் வெளிவந்த கருத்துரை இதை எழுதியவர் சற்றடேரிவியு (Saturday Review) என்ற ஏட்டின் முன்னாள் ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான எஸ்.சிவநாயகம் அவர்களாவர்.

இலங்கையின் வரலாற்றிலே மிகப பயங்கரமானதும் ஆட்களைப் பலி கொண்டதில் இரண்டாம் இடத்தைப் பிடிப்பதுமான குண்டு வெடிப்பு கடந்த பங்குனி மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற போது நாட்டின் யுத்த அமைச்சரை அது பலி கொண்டது.

முப்பது பேருக்கும் மேலானோர் இதில் கொலைப்பட்டனர். பாதுகாப்பு உத்தியோகத்தர், பொலிஸ்படையினர், சாதாரணப் பயணிகள் எனப் பலரும் இதில் அடங்குவர். இவற்றுடன் படுகாயமுற்றோர் தொகை நூறுக்கும் மேலாகும். பலியான அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் பெறுமதி வாய்ந்த பென்ஸ் கார் இத்தகர்ப்பின் போது சின்னாபின்னமாயிற்று. அதிலிருந்த நான்கு உடம்புகளின் நிலையும் அதுவே, இக்குண்டு வெடிப்பின சத்தம் 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு ஒலித்ததாம். இச்சம்பவம அரசாங்கம் குண்டு பொழிந்து கொண்டிருக்கும் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடைபெறவில்லை நாட்டின் தலைநகரும் ஆட்சி பீடத்தின் இருப்பிடமும 'கசினோ' சூதாட்டத்தின் முதலிடமாயுள்ள கொழும்பு மாநகரிலே தான் இத்தகர்ப்பு நடைபெற்றிருக்கிறது. காரணம் யாராயிருபபினும இது நடைபெற்ற இடம பொலிஸ் பாதுகாப்பாளர் வாழும் அரசாங்க வதிவிடங்களுக்கு அருகாமையே ஆகும் இந்த இடம் இறந்த அமைச்சரின் வீட்டுககும் அவர் நிறைந்த பாதுகாப்புடன் உலாவி வந்த சூழலுக்கும் தூரத்தில் அல்ல. யுத்தக் கெடுபிடிகளிலும் அழிவுகளிலும் ஈடுபட்டுள்ள ஓர் அரசாங்கத்திற்கு இந்தப் படுமோசச் சம்பவம் சுய ஆய்வுக்கும் இதனை யார் செய்தார் எப்படிச் செய்தார் என்ற வெளி விசாரணைக்கும் உரித்தானதே. எனினும் இதன் உண்மைகள் வெளிவர வெகு நாட்கள் செல்லலாம், தாமதம் ஆகலாம்.

### அனுதாபமும் உண்மை நிலையும்

இத்தகைய சம்பவங்களை சக அரசியல் வாதிகளும் பத்திரிகை ஆசிரியர்களும் ஏனைய விமர்சகர்களும் ''கோழைத்தனமானது'', ''அர்த்தமற்றது - கொடூரமானது'' எனக் கண்டிப்பதும் கருத்துத் தெரிவிப்பதும் மரபும் வழக்கமுமாய் உள்ளது. இந்த அனுதாபங்கள் சில இடங்களில் பசப்புக்கள் ஆகும் அளவுக்கு வளர்வதும் உண்டு. தாம் பூரணமாக வெறுத்தவரையும் அவர் இறந்தபின் புகழ்மாலை சூடுவது எம் சமூகத்திலே நடைபெறும் நிகழ்ச்சி! அதிஷ்டவசமாக எமது தமிழினம் (Tamil-Nation) ஏடானது இவ்வித போலிச் சடங்குகளில் ஈடுபட வேண்டிய நிலையில் இல்லை கடமையும் பொறுப்பும் சார்ந்த அரசினாலும் அரசியல்வாதிகளாலும் பாதுகாப்பற்ற ஆயிரமாயிரம் ஆண்கள் பெண்கள் குழந்தைகளுக்கு அநீதி இழைக்கப்படுவதையும் அவர்களது உயிர் பறிக்கப் படுவதையும் உடைமைகள் நாசமாக்கப்படுவதையும் வழிபாட்டு இடங்கள் அழிக்கப் படுவதையும் அவர்களது அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுவதையும் வெளிக் காட்டுவது எமது கடமையெனக் கைக்கொண்டுள்ள நாம் போலிப் பசப்புகளிலோ சடங்குகளிலோ ஈடுபடவேண்டியவர்களாய் இல்லை.

பல கொடுங்கோன்மையாளர்களிடம் இருந்ததைப் போல இறந்த திரு விஜேரத்னா அவர்களிடம் சில தனிப்பட்ட நலன்களும் இருந்தது உண்டு. தமிழின எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பி இந் நாட்டின் தலைமைக்கு வந்தவர்களைப் போல இவரது சரிதம் 1983 க்கு முன் இருந்ததில்லை. ஊழல் மோசடி பல கோடி திரட்டல் என்ற உச்ச நிலைத் தலைவராகவும் இவர் பெயர் பெறவில்லை. பொய்யுக்கு அடுத்தபடியான தன்னை வியக்கும் தற்புகழ்ச்சியே இவரிடம் கூடுதலாகக் காணப்பட்டதெனலாம், இவ்விதம் மேலும் சில கூறலாம் நாம் எந்தக் கொலையையும் அனுசரித்துப் பேசவில்லை. ஆனால் இங்கு கொல்லப்பட்டது அரசியல்வாதியான திரு ரஞ்சனே ஒழிய தனி மனிதன் ரஞ்சன் அல்ல, இங்கு ஆய்வுக்கு உரியதும் அரசியலே.

பலம் வாய்ந்த சிலர் தமது சுய ஈடுபாட்டை நிலைநாட்ட அரசியல் ஒழுங்கு நாட்டின் இறைமைத்துவம் எனப்பேசிக் கொண்டிருக்கலாம். இவர்கள் இந்த அரசியலுக்குள் அகப்பட்டுள்ள தனி மனித சுதந்திரத்தையும் அடக்கப்பட்டோரின் துயர்களையும் பேச வேண்டாமா? அரசியல் அதிகாரம் கொண்டும் படைபலம் கொண்டும் நடாத்தப்படும் எண்ணிறந்த கொலைகளும் உயிர்பறிப்புக்களே என்ற கண் கொண்டு இந்நாட்டு நிலையைப் பார்ப்பது கடமையே ஒழிய ஒன்றிரண்டை மட்டும் எடுத்துச் சீர்தூக்குவது முறையாகாது.

நூறு ''புலிகளைப்'' பிடிப்பதற்கு ஒரேயொருவழி மன்னார்ப் பகுதியிலுள்ள மடு மாதா கோவிற் சூழலில் புகலிடம் தேடியிருந்த 9,000 அகதிகளையும் அவர்களுக்கு மனித நேயம் என்ற அடிப் படையில் உதவி செய்து கொண்டிருந்த பொது நிறுவனங்களையும் ''உடனடியாக'' வெளியேற்றுவதே என்ற நெஞ்சம் பூண்டோரின் நிலை அர்த்தமற்றது கொடூரமானது' என்பதல்லாது வேறென்ன? ஓர் ஆயிரம் விடுதலைப் போராளிகளைப் பிடிப்பதற்கு வழி யாழ்குடா நாட்டைத் தாயகமாகக் கொண்ட சுமார் பத்து லட்சம் மக்களை ''எங்கேனும்'' வெளியேற்றுவதே எனக் கொண்ட மனிதனின் மனப்பாங்கு எத்தகையது? தமது கணவனை, மனைவியைத் தாயை, மகனை இழந்தும் வீடு மனை இழந்தும் வாழ்வு தகர்த்து எறிபட்டும் துயர்வடிவாய் வாழும் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் இந் நிலைக்கு ஆளானது ஆட்சி பீடத்தின் கொடு நிலையினாலேயே என்பதையும் இதன் முக்கிய இயக்குனராயிருந்தவர் திரு ரஞ்சன் விஜேரத்னா என்பதையும் எவர் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களோடு திரு ரஞ்சனின் கொலையில் இடம் பெற்றுள்ளதாக அவர்கள் கொள்ளும் கொதிப்பிலும், ஆயவிலும் நாங்களும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

### அனுபவம் அறிவு தருமா?

இலங்கையின் ஆட்சிபீட அரசியல் அரங்கிலே ஒரு துன்பியல் பகுதி என்னவெனில் எப்பகுதியினர் அரசியலுக்கு அப்பால் நின்றிருக்க வேண்டுமோ அவர்களே-குறிப்பாக பௌத்த குருமார்களே- நாடு சுதந்திரம் அடைந்ததும் அரசியலுள் புகுந்தமையாகும். இதன் பயனாய் அரசியலில் குறுக்கு வழி நாடிய கிறிஸ்தவர் சொலமன் வெஸ்ற்றிஜ்வே டயஸ் பண்டாரநாயக்க பௌத்த ஒரு பீடத்தைத் தஞ்சமெனக் கொண்டார்.

அவர்பிரதமராகிகடைசியில் அதே காவி உடை தரித்த ஒருவரின் கைத்துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி மடிந்ததும் இருபது வருடத்துக்கு முன் நடந்த நிகழ்ச்சியியே பௌத்த குருமாரின் சம்மதமின்றி பலதித மாற்றங்களைக் கொண்டு வருதல் இயலாது என்ற அளவுக்கு இதன் பின் அரசியல் வளர்ந்தது. தமது கணவனைப் பின் பற்றிய சிறிமாவோ அம்மையாரது ஆட்சியில் பெரும் பத்திரிகைகள் பொறுப்பேற்கப் பட்டு அரசியல் ஊதுகுழல்களாயின. நீதித் துறையில் அரசியல் புகுந்தது!

இன்று நடைபெறுவதென்ன? படை பலம் அரசியலை ஆட்டிவைக்கிறது. கடற்படையின் அணிவகுப்பில் நின்றசிப்பாய் இந்தியப்பிரதமருக்குக் குறிவைக்க முயன்றான்! பதினொரு வருடம் தவறான அரசியல் நடாத்திய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா 1987-08-18 ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத்துக்கு உள்ளேயே நிகழ்ந்த கைக்குண்டு வீச்சுக்கும் துப்பாக்கிச்சூட்டிற்கும் இரையாகாது அதிர்ஷ்டவசமாக தப்பினார் அவருடன் இருந்த இன்றைய ஜனாதிபதிக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது திரு.ரஞ்சனின்பதவியை அவ்வேளை வகித்த திரு லலித் அத்துலத்முதலி குடலில் சிறுபாகம் அகற்றப் பட்டு இன்றிருக்கிறார். இந் நிலையில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொலை கொழும்பு அரசியல் வாதிகளுக்கு வரலாறு கொடுத்துள்ள ஓர் இறுதி அறிவிப்பு எனக் கொள்ள வேண்டியுள்ளது இக் கொலை நடந்துள்ள விதம் எவரும் எந்த இடத்திலும் எவ்வித உயர் பாதுகாப்பு மத்தியிலும் பாதுகாப்போடு இல்லை என்பதைப் புலப்படுத்துகிறது. திரு ரஞ்சனின் கொலைக்கு அடுத்ததாக என்ன? இக் கேள்வியை ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களே தம் முன் எழுப்ப வேண்டியுள்ளது வரலாறு இன்னொன்றையும் சுட்டிக் காட்டு

மொழி பெயர்ப்பு
**நாக. பத்மநாதன்**

இறுதி: அரசியல் தளம் பூராக சிதைவை அடையும் முன் இன்னொன்று நிகழுமா? அதாவது அரசியல் நிர்வாகத்திற்கும் படைபல நிர்வாகத்திற்கும் இடை பெபோர் மூளுமா? என்பது கேள்வி? அரசியல் அறிவுடைமைகொண்டு இவற்றைத் தவிர்க்கவேண்டின் இதற்காகச் செயற்பட வேண்டியவை இரண்டு உள. ஒன்று தமிழருக்கு அவர்களது உரிமையைக் கொடுப்பது. இரண்டு. அவர்கள் மீது தொடுத்துள்ள போரை வளர்க்காது நிறுத்துவது.

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

ஹெலிக்கொப்டரொன்று நேற்று மாலை வீசிய துண்டுப் பிரசுரத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை 26ஆம் திகதி நள்ளிரவு முதல் 29ஆம் திகதி நள்ளிரவுவரை பாதுகாப்புப் படையினர் தாக்குதலை நிறுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# யாழ். பல்கலையில் இன்று வள ஆய்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் தமிழீழ வள ஆய்வுக் கருத்தரங்குத் தொடரில் இன்றைய நிகழ்வுகளாக ஐந்து தலைப்புக்களில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் காலை 9-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளன.

விவசாயபீட பேராசிரியர் கலாநிதி வி நித்தியானந்தன் எழுதிய விவசாய அபிவிருத்தியில் ஓர் கண்ணோட்டம், கலாநிதி ஏ. எஸ். விவேகானந்தன். கலாநிதி இ. சிவகடாட்சம் ஆகியோர் இணைந்து எழுதிய விவசாயமும் பயிர்ச் செய்கையும், கலாநிதி எஸ். நவரட்ணராஜா, கலாநிதி இ. சிவகடாட்சம் ஆகியோர் இணைந்து எழுதிய வடக்கு-கிழக்கு மிருகவள அபிவிருத்தி, கலாநிதி க. சித்திரவடிவேல் எழுதிய வடக்கு-கிழக்கு மீன் வளம், கலாநிதி இ. சிவகடாட்சம் எழுதிய மூலிகைவளம் ஆகியனவே இன்று இடம் பெற்றுள்ள ஆய்வுக் கட்டுரைகளாகும். இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மறுமலர்ச்சிக் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# விசேட தபால் விநியோகம்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகள் தபால் விடுமுறை தினங்களாகும். இரு தினங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட தபால் சேவைகளே இடம் பெறும். 27ஆம் திகதி திங்களன்று தபால் விநியோகம் விசேடமாக இடம்பெறும்.

தபால் அலுவலகங்களிலிருந்து தபால் விநியோகிக்கும் பணி எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறாது. தபால் நிலையங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுவது போன்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

---

பஸ்

யது. அதனால் பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த இருவர் தலையில் பலத்த காயமடைந்தனர். பலர் சிறு காயங்களுக்குள்ளாயினர். இவர்கள் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

(85)

# எரித்திரியா முழுமையாக விடுதலை முன்னணியிடம்

(அடிஸ் அபாபா)

எத்தியோப்பியாவிலிருந்து 18,000க்கும் அதிகமான யூதர்களை இஸ்ரேலுக்கு அழைத்துச் செல்லும் அவசரப் பணி முடிவடைந்து விட்டது. அங்குள்ள கறுப்பின யூதர்கள் அனைவரும் இஸ்ரேலில் குடியேற அனுமதி கிடைத்துள்ளது.

எத்தியோப்பியா கிளர்ச்சிப் படையினர் தலைநகர் அடிஸ் அபாபாவை நெருங்கி வருவதால் நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்களும், அந்தந்த நாட்டுத் தூதரகங்களின் ஆலோசனையின் பெயரால் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இதனிடையே எத்தியோப்பியாவின் வடபகுதியிலிருக்கும், எரித்திரியா நகரமான அஸ்மாரா எரித்திரிய விடுதலை முன்னணியிடம் வீழ்ச்சி அடைந்துள்ளதை எத்தியோப்பிய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

எரித்திரியாவின் முழுப்பகுதியும் தமது கட்டுப்பாட்டினுள் வந்துள்ளதாக எரித்திரிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

லண்டனில் எரித்திரிய விடுதலை முன்னணியுடன் பேச்சு நடத்துவதற்காக செல்லவிருந்த எத்தியோப்பியப் பிரதமர் டிங்கா இடைக்கால அரசு நிறுவுவது பற்றியதே முக்கிய பிரச்சினையாக இருக்குமெனக் கூறியுள்ளார்.

# குடும்பப்பெண் தீமூட்டி தற்கொலை முயற்சி

(முல்லைத்தீவு)

குடும்பத்தகராறு காரணமாக குடும்பப் பெண்ணொருவர் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீமூட்டியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழன இரவு தண்ணீரூற்றுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இரண்டு பிள்ளைகளின் தாயாரான திருமதி ஆனந்தராசா நாகேஸ்வரி (வயது 32, தண்ணீரூற்று) என்பவரே இத்தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவராவர். இவர் பலத்த தீக்காயங்களுடன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# குண்டு வீச்சால் கண்களை இழந்த வயோதிபர்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் அளம்பில் பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட விமானத் தாக்குதலால் குடும்பஸ்தரொருவர் தமது கண்களை இழந்துள்ளார். மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்று முன்தினம் காலை ஏழு மணியளவில் அளம்பிலில் மேற் கொள்ளப்பட்ட இவ் விமானத்தாக்குதலின் போது குண்டொன்று பதுங்கு குழிக்கருகில் வீழ்ந்து வெடித்ததில் திரு ஞானமுத்து (வயது 58) என்பவர் கண்களை இழந்துள்ளார் இவரின் வீடு உட்பட மூன்று வீடுகள் இத் தாக்குதலில் பலத்த சேதமடைந்துள்ளன.

---

இறங்குதுறை

என்று செயலக உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

இறங்குதுறை திருத்தி அமைக்கப் படாமையாலேயே யாழ். மாவட்டத்திற்கு எடுத்துவரப்படும் கப்பல்களை ஒவ்வொன்றாகவே ஒழுங்கு செய்ய வேண்டியுள்ளது என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளும் பலதடவைகள் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

அதேவேளை கொழும்பு சென்றிருக்கும் செயலகத்தின் செய்திட்டப் பணிப்பாளர் அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இறங்குதுறையைத் திருத்தி அமைப்பதற்கான பணத்தை எடுத்துவருமிடத்து திருத்த வேலைகளை உடனடியாக ஆரம்பித்து உணவுப் பொருள்களை இலகுவாக இறக்குவதற்கு ஏற்பாடு செய்வது என்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

(க)

# அம்மன் அடியார்களை யானை தாக்கியது

(வவுனியா)

அம்மன் ஆலயத்தை தரிசனம் செய்து விட்டுத் திரும்பிய நான்கு பேரை அவர்களின் துவிச்சக்கர வண்டியுடன் காட்டுயானை ஒன்று தூக்கி வீசியதில் இருவர் பலத்த காயமடைந்துள்ளனர்.

வன்னி விளாங்குளத்தில் உள்ள மேற்படி ஆலயத்திற்குச் சென்று நேற்று அதிகாலை 1.00 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் ஒரே துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த இவர்களை திடீரென யானை ஒன்று தூக்கி வீசியதில் எஸ் சுஜீபன் (வயது 11) ஆர். புவனேந்திரன் (வயது 35) ஆகியோர் பலத்த காயமடைந்துள்ளனர். ஏனைய இரு சிறுவர்களும் மயிரிழையில் உயிர் தப்பிக்கொண்டனர்.

(க)

# மூன்று நாட்களின் பின் வழமைக்கு திரும்பியது

(சென்னை)

தமிழ் நாட்டில் கடந்த மூன்று நாட்களாகப் பாதிக்கப்பட்டிருந்த இயல்பு வாழ்க்கை நேற்று வழமைக்குத் திரும்பியது.

செவ்வாய்க்கிழமை இரவு ராஜீவ் காந்தி கொலையுண்டதை அடுத்து, மாநிலத்தில் முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்த இயல்பு நிலை தற்போது சீரடைந்துள்ளது. நேற்று முதல் பேருந்து புகையிரதப் போக்குவரத்துகள் வழக்கம் போல் நடைபெறுகின்றன. வர்த்தக நிலையங்களும், தொழிற்சாலைகளும், திரையரங்குகளும் செயற்படுகின்றன.

நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசிய மாநில அரசுத் தலைமைச் செயலர் ரிவி, அன்றனி மாநிலம் முழுவதும் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களில் தமிழ் நாட்டில் 3653 சமூக விரோதிகள் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். அரசியல் கட்சித் தலைவர்களுக்கு சட்ட விதிகளுக்கு ஏற்பப் பாதுகாப்பு வழங்கப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பம்பாயில் டாங்கேயின் இறுதிக் கிரியைகள்

(புதுடில்லி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான டாங்கேயின் பூதவுடல் நேற்றுமாலை பம்பாய் நகரின் தாதர் பகுதியில் மயானம் ஒன்றில் சகல அரச மரியாதைகளுடனும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்தபுதனன்று அதிகாலை மரணமடைந்த திரு. டாங்கேயின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக பம்பாயில் வைக்கப்பட்டிருந்தது நேற்றுமாலை இறுதிக் கிரியைகள் இடம் பெற்றன.

---

மூன்று

25) வீரக்குட்டி கோணமலை (வயது52) வீரபத்திரன் பொன்னம்பலம் (வயது 29) ஆகிய மூவரையும் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இவர்கள் பற்றிய தகவலெதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

---

மருந்துப்

எடுக்கப்படவுள்ளது. இதற்காக சகல மருந்துப் பொருள்களுக்குமான புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது என்று யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

(க)

---

யுத்த நிறுத்தத்தை

நிறுத்தம் சிங்களப் பெரும்பான்மை மதப்பிரிவினரை மட்டும் திருப்திப்படுத்தும் வகையில் குறுகிய மதவாத நோக்குடன் மேற்கொள்ளப் பட்டிருப்பது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது.

போர் நிறுத்தம் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்க வேண்டும். சமரசப் பேச்சுக்கான சமாதான சூழ்நிலையையும், இயல்பு நிலையையும் உருவாக்குவதாக அமைய வேண்டும். சிங்கள அரசு உண்மையில் சமாதான வழிமுறைகளைக் கடைப்பிடித்து அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்பினால் நிபந்தனையற்ற கால வரையறையற்ற போர்நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். இவ்வாறு இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

---

ஆசிய அபிவிருத்தி

தின் மூலம் ஆய்வுகூட உபகரணங்கள் விநியோகிக்கப்படும். பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென ஏலவே ரூபா 10 கோடி பெறுமதியான விஞ்ஞான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

உபகரணங்களை வழங்குவதற்கான வைபவம் எதிர்வரும் 29ஆம் திகதி நாரன்பிட்டியிலுள்ள மத்திய ஆய்வுகூடக் களஞ்சியசாலையில் உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் தலைமையில் நடைபெறும்.

---

தீவுப்பகுதியில்

முதல் மாலைவரை தொடர்ச்சியாக மேற்படி தாக்குதலை நடாத்திய படையினர் இடையிடையே துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர். இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

(22)

---

அரசாங்கம்

15 லீற்றர் எரிபொருள் மட்டுமே தமக்குக் கிடைக்கின்றது என்றும் இது தமக்கு போதுமானதாக இல்லை என்றும் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். மேற்படி அளவு எரிபொருளை விட மேலதிகமாக எடுத்து வருவதற்கு கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி தரவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் இதுவரை காலமும் கூறிவந்ததாகவும் ஆனால் கூட்டுப் படை அலுவலக அதிகாரிகளுடன் தாம் பேசிய போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளே மேற்படி அளவீட்டில் எரிபொருள் போதுமானது என்று கூறியதாகவும் செயலகத்தின் அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் எரிபொருள்களை எடுத்து வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளுக்கும் செயலக அதிகாரிகளுக்குமிடையில் இணக்கம் ஏற்பட்டது.

(க)

---

இன விகிதாசாரம்

பேணப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற மேற்படி பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தோற்றிய மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளில் எவரும் சித்தியடையவில்லை.

இதேவேளை, பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பயிற்சியில நியமிக்கப்படுவர். அப்படி நியமிக்கும் பட்சத்தில், தற்சமயம் பதில் கடமை புரிபவர்களின் எதிர்காலம் பற்றிக் கேள்வி எழுந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 15 நிர்வாக சேவைப் பதவிகளில் பொது எழுதுவினைஞர் சேவையில் அதிசிறப்பு தரம் ஒன்று வகுப்புக்களைச் சேர்ந்தவர்களே இப்பொழுது பதில் கடமையாற்றி வருகின்றனர்.

---

காங்கிரஸ்

வரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான என். டி. திவாரி, மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் சரத் பவார், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் ஆகியோரின் பெயர்களும் அடிபடுகின்றன.

அதேவேளை சோனியா காந்தி தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய மறுத்து விட்டதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

---

இலங்கை

இலங்கைத் தமிழர் மீது கண்காணிப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், கெடுபிடிகள் இடம்பெறுவதாகவும், சோட்டப்பட்டு அகதிமுகாமில் பொலிஸார் தீவிர சோதனை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை, தமிழ் நாட்டில் உள்ள 200 அகதிமுகாம்களுக்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

---


## மரண அறிவித்தல்

### திரு. நாகலிங்கம் சந்திரன்

பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் சந்திரன் அவர்கள் (25-05-91) இல் காலமானார். இவர் பராசக்தியின் அன்புக்கணவரும், லோகேஸ்வரி, இராசன் ரவி, பபி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினி, ஜெயம், சாந்தி, மஞ்சு, விஜயன் ஆகியோரின் பெரியப்பாவும், நவநீதம், சிவபாக்கியம் காலஞ்சென்ற நடராசா, சேனாதிராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காந்தி, புஸ்பம், ராணி, துரை, குணம், லதா ஆகியோரின் மாமனாரும், விஜிதா, கோபு, சுட்டி, றோசான், பிரசன்னா, சுமன், தீசன, ரமன், ஜெயதீசன், நிரோஷ், டினேஸ், குணேஸ், யோகி, வினோத், ஜெயா, கண்ணன், மேனகா, தபோ, பாஸ்கி, சுதாகர், தர்சிகா, அனுஷியா ஆகியோரின் பேரனுமாவார். இவரது பூதவுடல் 26-05-91 இன்று காலை 9.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக இல 44, கொழும்புத்துறை றோட், கண்டிக்குளி இல்லத்திலிருந்து துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பாண்டியன்தாழ்வு.
(B/2584)

தகவல்:
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.